# DEPOSITION OF WITNESS

(ChapterXXIII Code of Criminal Procedure)

-----------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR

**CC.No.246/2022**

**Date : 07.01.2025**

**PW2 குமார் (வனவர்) த/பெ. சீனிவாசன்**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் ஏற்கெனவே 25.03.2024 அன்று இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன்.இந்த வழக்கின் எதிரிகள் அருள்பாண்டியன் த/பெ. மணி, ஆறுமுகம் த/பெ. ராஜமாணிக்கம் ஆகியோர்களை வனச்சரகர் குமார் கைது செய்தார். அவர்களை நான் விசாரித்து எதிரி ஆறுமுகம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் குமார், வனக்காப்பாளர்கள் பாலசுப்பிரமணியன் மற்றும் குணசேகரன் முன்னிலையில் பதிவு செய்தேன். **எதிரி ஆறுமுகம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி அருள்பாண்டியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். **எதிரி அருள்பாண்டியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. H நமூனா அ.சா.ஆ.4 ஆகவும், மகசர் நமூனா அ.சா.ஆ.5 ஆகவும், தோராய வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அரும்பாவூர் காவல் நிலைய ஆய்வாளர், உதவி ஆய்வாளர், தலைமை காவலர் ஆகியோர்களிடம் எழுத்துமூலமாக நான் முன்னறிவிப்பு கொடுத்தேனா என்றால் வாய்மொழியாக வனச்சரகர் குமார் சொன்னார். எங்களுடைய அலுவலகம் வேப்பந்தட்டையில் உள்ளது. வீக்லி டைரி பராமரித்து வருகிறோம். அரும்பாவூர் போலீஸார் Bolero ஜீப்பில் வந்தனர். அவர்கள் மூவரும் காவல் துறை

சீருடையில் வந்தனர். வேப்பந்தட்டைக்கும், சம்பவ இடத்திற்கும் சுமார் 12 கி.மீ தூரம் இருக்கும். எங்களுக்கு அரசாங்க் ஜீப் இருக்கிறது. அது பழுதாகி உள்ளது. நான் இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றேன். என்னுடைய இருசக்கர வாகனத்தின் பதிவு எண் ஞாபகமில்லை. Hero Honda Splender Plus வாகனம். எங்களுக்கு மான் வேட்டையாட போனதாக தகவல் வந்தது. தெரிந்துதான் சம்பவ இடத்திற்கு சென்றேன். எனக்கு துப்பாக்கி உபயோகிக்க அனுமதி வழங்கப்படவில்லை.

நாங்கள் எங்களுடைய அலுவலகத்திலிருந்து அரும்பாவூர் காவல் நிலையத்திற்கு சென்று அரும்பாவூர் காவல் துறையினரை அவர்களுடைய ஜீப்பில் வரச்சொல்லிவிட்டு சென்றோம். ஆய்வாளர் கலா பொதுநாட்குறிப்பேட்டில் எழுதிவிட்டு வந்தாரா என்று என்னிடம் சொல்லவில்லை. சம்பவம் நடந்த தேதியின் கிழமை ஞாபகமில்லை. நாங்கள் ஏழு பேர் இருந்த நிலையில் மான் வேட்டையை நடைபெறாமல் தடுத்திருக்க முடியும் என்றால் தடுக்க வாய்ப்பில்லை. சம்பவம் நடந்தது 1.00 மணி முதல் 2.00 மணி வரை இருக்கும். அந்த சமயம் இருட்டு என்றால் பௌணர்மி நிலவு வெளிச்சம் இருந்தது. நான் இருந்த இடத்திற்கும், அ.சா.3 பாலசுப்பிரமணியன் இருந்த இடத்திற்கும் இடையே சுமார் 20 மீ தூரம் இருக்கும். அ.சா.3 சைகை மூலம் தகவல் தெரிவித்தார். நான் கண்ணாடி போட்டால்தான் என்னால் படிக்க முடியும் என்றால் சரிதான்.

ஒப்புதல் வாக்குமூலங்களை எவ்வாறு பதிவு செய்தேன் என்றால் என்னுடைய டார்ச் லைட் மூலம் பதிவு செய்தேன். அந்த டார்ச் லைட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை மணிக்கு பதிவு செய்தேன் என்று ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அரும்பாவூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர், தலைமை காவலர் ஆகியோர் அவர்களுடைய கையெழுத்துடன் தேதியை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் துப்பாக்கி மற்றும்

வாகனத்தை கைப்பற்றியதற்காக அந்த கைப்பற்றிய பொருட்களின் மீது சம்பவ இடத்தில் வைத்து குறியீடு எழுதினோமா என்றால் இல்லை. அரும்பாவூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர், உதவி ஆய்வாளர், தலைமை காவலர் ஆகியோர்களிடமிருந்து வாக்குமூலம் வாங்கவில்லை. மானின் நடு வயிற்று பகுதியில் குண்டு காயம் இருந்தது. மானின் தாடை பகுதியில் கட்டையால் அடித்த காயம் இருந்தது.

இந்த வழக்கை கோப்புக்கு எடுக்க கோரி அ.சா.1 வனச்சரகர் எல். குமார் நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தாரா என்றால் தெரியவில்லை, அவருக்குத்தான் தெரியும். கைப்பற்றிய துப்பாக்கியை படைகலன் அதிகாரிக்கு அனுப்பி சான்று பெறவில்லை. இறந்த மானின் உடலில் தோட்டா அல்லது பால்ரஸ் இருந்ததா என்றால் பார்த்து இருந்ததா என்று தெரியவில்லை. சம்பவ இடத்தில் தயார் செய்த ஆவணங்களை சுமார் 1/2 மணி முதல் 3/4 மணி நேரத்திற்குள் தயார் செய்தோம். சம்பவ இடத்தில் ஆவணங்களை தயார் செய்துகொண்டு சொத்துக்களை பறிமுதல் செய்து நிலையம் வந்து W.L.OR. தயார் செய்தோம். இந்த சம்பவத்திற்கும், எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றாலும், யாரோ ஒருவர் செய்த செயலுக்கு எதிரிகளின் பெயரில் தவறாக வழக்கு பதிவு செய்துள்தேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.